016590

நுபா2 / 2668 / 2016
நாள்: 10 .08.2017

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
ஆணையாளர் அலுவலகம்,சேப்பாக்கம், சென்னை 600 005.

ஆணையர் அலுவலகம் 24 ஆக 2017 சென்னை-600 005 பொருள் வழங்கல் (ம)நு.பா

# ஆய்வறிக்கை

பொருள் நுகர்வோர் பாதுகாப்பு – மாவட்ட அளவிலான நுகர்வோர் பாதுகாப்புக் கூட்டங்கள் – காலாண்டு/அரையாண்டு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடத்துதல் – ஜனவரி 2016 – டிசம்பர் 2016 மாதங்களுக்கான அறிக்கைகள் மீதான ஆய்வு – தொடர்பாக

பார்வை
1. அரசாணை எண். 167, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 27/10/2009
2. அரசாணை எண். 168, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 27/10/2009
3. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள்.

஌ஂஂஂஂஂஂஂஂ

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986ன் விதி 8(A)ன் கீழ் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்குட்பட்டு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவினை அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தி அக்குழு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பொது விநியோக திட்டம் சம்மந்தமான மாவட்ட அளவிலான பிரச்சினைகள் பற்றி விவாதம் செய்திட ஆண்டொன்றிற்கு இரு கூட்டங்களை நடத்த வேண்டுமென பார்வை 1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளில் உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநிலத்தின் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை ஒருங்கிணைக்கும் அலுவலர் என்ற ரீதியில், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளரால், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் முறையாக மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டங்களை நடத்துகின்றனரா என ஆய்வு செய்யப்படுகின்றது. கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து ஜனவரி 2016 முதல் டிசம்பர் 2016 வரையிலான காலத்தில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு கூட்டம் நடத்தியது தொடர்பாக பெறப்பட்ட கூட்ட நடவடிக்கை குறிப்புகள் மீதான ஆய்வுரை பின்வருமாறு

## அரையாண்டு ஆய்வுக் கூட்டம்:

ஜனவரி 2016 – டிசம்பர் 2016 காலத்திற்கான மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு கூட்டம் நடத்தி, விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட பொருட்கள் பற்றிய நடவடிக்கை குறிப்புகளின் (Minutes of the Meeting) நகலை 05/01/2017 க்குள் ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அரையாண்டுக் கூட்டம் நடத்தியதற்கான அறிக்கை அனுப்பியுள்ள மாவட்டங்களின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | ஜனவரி–ஜூன் 2016 காலத்திற்கான கூட்டம் நடத்தப்பட்ட நாள் | ஜூலை-டிசம்பர் 2016 காலத்திற்கான கூட்டம் நடத்தப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | 28.01.2016 | |
| 2. | இராமநாதபுரம் | 25.02.2016 | |
| 3. | தருமபுரி | 22.06.2016 | |
| 4. | கன்னியாகுமரி | 23.06.2016 | |
| 5. | தேனி | 27.06.2016 | |
| 6. | நீலகிரி | 29.06.2016 | |
| 7. | விழுப்புரம் | 21.07.2016 | |
| 8. | திருப்பூர் | 22.07.2016 | |
| 9. | புதுக்கோட்டை | 25.07.2016 | |

மேற்காணும் 9 மாவட்டங்களிலிருந்து நுகர்வோர் பாதுகாப்பு குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது தொடர்பான அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதனில் எந்தவொரு மாவட்டத்திலும் இரண்டு முறை அரையாண்டு கூட்டங்கள் நடத்தப்படவில்லை. மேலும், விழுப்புரம், திருப்பூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் அரையாண்டு முடிவுற்ற பிறகு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் ஒவ்வொரு அரையாண்டிலும் தவறாது மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டங்களை முறையான கால இடைவெளியிலும் உரிய காலத்திற்குள்ளும் நடத்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கீழ்க்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான அரையாண்டு கூட்டங்கள் நடத்தாதது மிகவும் வருந்தத்தக்கதும், கண்டிக்கத்தக்கதாகும். கூட்டங்கள் நடத்திட தொடர்ந்து பல முறை அறிவுரைகள் வழங்கியும், கூட்டங்கள் நடத்தாதற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் துணை ஆணையாளர்(ந) வடக்கு/தெற்கு விளக்கம் அளிக்க கோரப்படுகிறார்கள்.

| வ. எண். | அறிக்கை அனுப்பிடாத மாவட்டத்தின் பெயர் | வ. எண். | அறிக்கை அனுப்பிடாத மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 13 | கோயம்புத்தூர் |
| 2 | திருவாரூர் | 14 | திருச்சி |
| 3 | அரியலூர் | 15 | கடலூர் |
| 4 | பெரம்பலூர் | 16 | விருதுநகர் |
| 5 | தூத்துக்குடி | 17 | சிவகங்கை |
| 6 | திருநெல்வேலி | 18 | தஞ்சாவூர் |
| 7 | காஞ்சிபுரம் | 19 | திண்டுக்கல் |
| 8 | ஈரோடு | 20 | மதுரை |

| | | | |
|---|---|---|---|
| 9 | கரூர் | 21 | திருவள்ளூர் |
| 10 | நாமக்கல் | 22 | திருவாரூர் |
| 11 | சேலம் | 23 | வேலூர் |
| 12 | கிருஷ்ணகிரி | | |

**காலாண்டு ஆய்வுக் கூட்டம்:**

தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் காலாண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டு, நடவடிக்கை குறிப்புகள் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டதை பரிசீலனை செய்ததில் கீழ்க்கண்ட மாவட்டங்களிலிருந்து மட்டுமே அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது .

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | கூட்டம் நடத்தப்பெற்ற நாள் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஜனவரி 16– மார்ச் 16 | ஏப்ரல் 16 – ஜூன் 16 | ஜூலை 16 - செப்டம்பர் 16 | அக்டோபர் 16 - டிசம்பர் 16 |
| 1 | பெரம்பலூர் | 28.06.2016 | | | |
| 2 | கரூர் | 22.07.2016 | | | |
| 3 | புதுக்கோட்டை | | 25.07.2016 | 24.10.216 | |
| 4 | மதுரை | | 26.08.2016 | | |
| 5 | திருவள்ளூர் | | 04.08.2016 | | |
| 6 | கிருஷ்ணகிரி | | 14.07.2016 | 20.09.2016 | |
| 7 | திருப்பூர் | 22.07.2016 | | | |
| 8 | திருச்சிராப்பள்ளி | | | | 07.11.2016 |
| 9 | விழுப்புரம் | | 21.07.2016 | | |
| 10 | கோயம்புத்தூர் | 03.08.2016 | | | |
| 11 | தருமபுரி | 22.06.2016 | | | |
| 12 | நாமக்கல் | | 17.06.2016 | | |
| 13 | நாகப்பட்டினம் | | 22.06.2016 | | |
| 14 | தேனி | | 20.06.2016 | | |
| 15 | ஈரோடு | | 24.06.2016 | | |

இதில் புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மட்டுமே 2 - காலாண்டு கூட்டங்கள் நடத்தியுள்ளனர். காலாண்டு கூட்டம் நடத்துவது சட்டப்பூர்வமானது என்பதால் ஆண்டொன்றுக்கு உரிய காலத்தில் தவறாது 4- காலாண்டு கூட்டங்கள் நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

காலாண்டு கூட்டம் மூன்று மாதங்களுக்கொரு முறை நடத்தப்பட வேண்டும் என்றுள்ள நிலையில் எந்தவொரு மாவட்டத்திலும் முறையான இடைவெளியில் காலாண்டுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. இனி வரும் காலங்களில் உரிய காலாண்டில் வெவ்வேறு துறை சார்ந்த பொருள் குறித்த கூட்டம் நடத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

2016ம் ஆண்டில் காலாண்டு கூட்டங்கள் தொடர்பான அறிக்கை அனுப்பாத மாவட்டங்கள் விவரம் பின்வருமாறு

| வ. எண். | அறிக்கை அனுப்பிடாத மாவட்டத்தின் பெயர் | வ. எண். | அறிக்கை அனுப்பிடாத மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | திருவண்ணாமலை | 2 | திருவாரூர் |
| 3 | சேலம் | 4 | விருதுநகர் |
| 5 | நீலகிரி | 6 | அரியலூர் |
| 7 | திருநெல்வேலி | 8 | திண்டுக்கல் |
| 9 | கடலூர் | 10 | சிவகங்கை |
| 11 | சென்னை | 12 | காஞ்சிபுரம் |
| 13 | தூத்துக்குடி | 14 | கன்னியாகுமரி |
| 15 | வேலூர் | 16 | தஞ்சாவூர் |
| 17 | இராமநாதபுரம் | | |

இக்கூட்டம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986ன்படி கூட்டப்படவேண்டிய ஒன்றாகும். இது மாவட்ட ஆட்சித் தலைவரின் சட்டப்பூர்வமான கடமைகளில் ஒன்றாகும். இது உரிய காலத்தில் கூட்டப்பட்டால்தான், மாவட்ட அளவிலான நுகர்வோர்களின் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்க்க மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்க இயலும். இக்கூட்டமானது உரிய உறுப்பினர்களை கொண்டும், தன்னார்வ நுகர்வோர் அமைப்பினரில் உறுப்பினராக சேர்க்கப்பட்ட நுகர்வோர் பிரதிநிதிகளை கொண்டும் கூட்டத்தின்போது முன்வைக்கப்படும் கோரிக்கைகள் / ஆலோசனைகளின் மீது விவாதம் செய்து உரிய தீர்வு கண்டு குறைகள் களையும் பொருட்டு நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கூட்டம் நடைபெற்றவுடன் கூட்டத்தின் முக்கிய முடிவுகளை செய்தி வெளியீடாக வெளியிட வேண்டும்.

சென்னை உயர்நீதி மன்ற நீதிப்பேராணை மனு எண். 2548/2013 மீது 05.11.2011ல் பகரப்பட்ட தீர்ப்புரையை பின்பற்றி அறிவுரைகள் வழங்கப்பட்டும் மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் மேற்குறிப்பிட்ட கூட்டங்கள் நடத்தப்படவில்லை என்பது, இவ்வலுவலக சுற்றறிக்கையை பின்பற்றப்படவில்லை என்பதை காட்டுகிறது. இது சட்டப்பூர்வமான நடவடிக்கை என்பதை அறிந்திருந்தும் கூட்டம் நடத்தாதது ஏற்புடையதல்ல. எனவே, கூட்டம் நடத்தாதற்கான காரணத்துடன் விளக்கம் அளிக்க சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் துணை ஆணையாளர் (ந) வடக்கு/தெற்கு கோரப்படுகின்றனர்.

எனவே, இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் ஏதேனும் ஒரு துறை சார்ந்த பொருள் குறித்த கூட்டம் நடத்துவதை உறுதி செய்து கொண்டு, அப்பொருள் தொடர்பான விவரங்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தொடர்புடைய தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கு தெரிவித்து. தவறாது கூட்டங்கள் நடத்தப்படவேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறு நடத்தப்படும் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி தக்க மேல் நடவடிக்கை

மேற்கொள்ள வேண்டும். மேலும் கூட்ட அறிக்கையின் விவரத்தை தவறாது ஆணையாளர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளரால் ஒவ்வொரு காலாண்டிலும் கூட்டப்படும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுக் கூட்டத்தின்போது பெரும்பாலான மாவட்டங்களில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழுக் கூட்டங்கள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படுவதில்லை என்று நுகர்வோர் அமைப்புகள் நேரிலும் பல அமைப்புகள் கடிதம் மூலமாகவும் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகின்றன. மேலும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு கூட்டங்கள் கூட்டப்பட்டாலும், குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ள அரசுத் துறைகள் மற்றும் அரசு சார் நிறுவனங்கள் கலந்துக் கொள்வதில்லை என்றும் புகார்கள் பெறப்படுகின்றன. எனவே மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துக் கொள்வதை உறுதி செய்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி பணிகளை கண்காணிக்கும்படி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-கா. பிரியா
இணை ஆணையாளர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
2. துணை ஆணையாளர்(நகரம்) வடக்கு / தெற்கு

நகல்

1.அரசுச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9

2.கண்காணிப்பாளர், நு.வி பிரிவு (இணையதளத்தில் வெளியிட)
3.கண்காணிப்பாளர், கணக்கு பிரிவு
4. நுபா2 இருப்புக் கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இணை ஆணையாளருக்காக

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நுபா 2 இருக்கை |
| மாவட்டம்:- | அறிக்கை மாதம்:– | | | |
| | படிவம் | | | |
| கூட்டங்கள் | காலம் | கூட்டம் நடத்திய நாள் | கூட்ட நடவடிக்கை குறிப்புகள் எண் மற்றும் நாள் | கூட்ட நடவடிக்கை குறிப்புகள் ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதா |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு அரையாண்டு கூட்டங்கள் | சனவரி 2016 முதல் சூன் 2016 வரையிலான காலத்தில் நடத்திய கூட்டங்கள் | | | |
| | சூலை 2016 முதல் டிசம்பர் 2016வரையிலான காலத்தில் நடத்திய கூட்டங்கள் | | | |
| தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டு கூட்டங்கள் | சனவரி 2016 முதல் மார்ச் 2016 வரையிலான காலத்தில் நடத்திய கூட்டங்கள் | | | |
| | ஏப்ரல் 2016 முதல் சூன் 2016 வரையிலான காலத்தில் நடத்திய கூட்டங்கள் | | | |
| | சூலை 2016 முதல் செப்டம்பர் 2016 வரையிலான காலத்தில் நடத்திய கூட்டங்கள் | | | |
| | அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரையிலான காலத்தில் நடத்திய கூட்டங்கள் | | | |